மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com
11.08.2022 வியாழக்கிழமை
supeedsam.com supeedsam@gmail.com

# குழந்தைகளுக்கு அறிவு வளர்ச்சி இல்லாமல் போகும் அபாயம்

கடந்த சில மாதங்களில் சிறுவர் மருத்துவ மனைக்கு வரும் குழந்தைகளில் 20 வீதமானவர்கள் இருந்ததை விட அதிக எடை குறைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதனை குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்தார். இதே நிலை நீடித்தால், அவர்களின் வயதுக்கு ஏற்ற எடை குறைவாக உள்ள குழந்தைகளாக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். வயதுக்கு ஏற்ப குழந்தையின் எடை அதிகரிக்காவிட்டால், அறிவு வளர்ச்சி குன்றிய குழந்தையாக மாறுவது மட்டுமல்லாமல், உள் உறுப்புகள் சரியாக வளர்ச்சியடையாத நோயுற்ற குழந்தையாகவும் மாறும் என்று அவர் வலியுறுத்தினார். இந்நிலையை உடனடியாகத் தடுக்க, குழந்தைகளுக்கு சரியான ஊட்டச்சத்தை வழங்க வேண்டும், இல்லையெனில் வருங்கால சந்ததியினர் பேரழிவைச் சந்திக்க நேரிடும் என அவர் எச்சரித்துள்ளார்.



## மூன்று விடயங்களில் அதிக கவனம் செலுத்துக

### ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தல்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று நேற்று புதன்கிழமை (10) இடம்பெற்றுள்ளது. குறித்த சந்திப்பில் இலங்கையின் நெருக்கடியான காலகட்டங்களில் ஐரோப்பிய ஒன்றியம் பங்குதாரராக 02

## அனைத்து கட்சிகளுக்கும் நியாயமான பிரதிநிதித்துவத்துடன் கூடிய ஆட்சிக் கட்டமைப்பு



அனைத்து கட்சிகளுக்கும் நியாயமான பிரதிநிதித்துவத்துடன் கூடிய ஆட்சிக் கட்டமைப்பை தயாரிப்பதே தமது நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் பல தரப்பினருடன் நேற்று (10) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. 02

## ஆளுனர்களின் கைகளுக்கு நிருவாக பொறுப்பு

மாகாணசபைகள் செயற்படாத பின்புலத்தில் , மாகாணங்களின் நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்கும் , மாகாணசபைகளின் செலவுகளை முகாமைத்துவம் செய்வதற்குமான பொறுப்பு ஆளுனர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய , ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் சகல மாகாண ஆளுனர்களுக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.



## ஜனாதிபதியின் இல்லத்திற்கு தீ 205மில்லியன் தேசம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்திற்கு தீ வைத்ததன் ஊடாக இதுவரை கணக்கிடப்பட்ட சேதம் 205 மில்லியன் ரூபாவை தாண்டியுள்ளதாக இன்று (10) கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் சட்டமா அதிபர் அறிவித்துள்ளார். 02

## ரஞ்சனுக்கு பொதுமன்னிப்பு நிபந்தனையும் உண்டு

நீதிமன்றத்தை அவமதித்தமையை ஒப்புக்கொண்டு சத்தியக் கடதாசியை சமர்ப்பித்த பின்னர் ரஞ்சன் ராமநாயக்கவை, பொது மன்னிப்பில் விடுதலை செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். ரஞ்சன் ராமநாயக்க நீண்ட காலமாக தண்டனை அனுபவித்து வருகிற நிலையில், நன்னடத்தை மற்றும் சமூகத்திற்கான பங்களிப்பு செய்வாராக இருந்தால் அவருக்கு பொதுமன்னிப்பை வளங்களுவது நியமானது என விஜயதாச 02



## பேராயருக்கு கொரோனா தொற்று

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மருத்துமனை தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர் தற்போது மருத்துமனையில் சிகிச்சை அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் மருத்துவமனையில் உள்ள பேராயரின் உடல்நிலை சீராக இருப்பதாக மருத்துவமனை நிர்வாகம் அறிக்கையில் மூலம் குறிப்பிட்டுள்ளது

### கொவிட் தொற்றால் மட்டக்களப்பில்

## ஒருவர் மரணம்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கொரோனா தொற்றால் வயொதிபர் ஒருவர் நேற்று (10) மரணமடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. குறித்த நபர் மட்டக்களப்பு விக்டோரியா ஒழுங்கை சேர்ந்த மாசிலாமணி (83) என தெரியவருகிறது. 02

## நவம்பர் இலங்கை திரும்புகின்றார் கோட்டா

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜாக்ஷ, 90 நாள் தாய்லாந்து விசா முடிந்து நவம்பர் மாதம் இலங்கை திரும்புவார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. கோட்டபாய ராஜாக்ஷ இன்று சிங்கப்பூரில் இருந்து புறப்பட்டு இன்று தாய்லாந்துக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் அங்கு 90 நாட்கள் தங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. மனிதாபிமான அடிப்படையில் கோட்டபாய ராஜாக்ஷவிற்கு தாய்லாந்திற்குள் நுழைய அனுமதி வழங்கப்படும் என தாய்லாந்து பிரதமர் நேற்று கூறியியிருந்தார். பதவி நீக்கம் செய்யப்பட்ட ராஜபக்ஷவின் சார்பில் இலங்கை அரசாங்கம் தாய்லாந்திடம் இந்த விசா கோரிக்கையை முன்வைத்ததாக அந்நாட்டு அரசாங்கம் உறுதிப்படுத்தியது. அவர் நாட்டை விட்டு வெளியேறியதில் இருந்து அவருக்கான பல செலவுகளை அவரும் அவரது மகன் மனோஜ் ராஜபக்ஷ வும் ஏற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அவரையும் அவரது மனைவியையும் ஏற்றிச் செல்ல விமானப்படை விமானத்தை தவிர வேறு எந்த அரச நிதியும் கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்தவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்கில் தஞ்சம் கோருவதற்கு பல முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், அதற்கு சாதகமான பதில் கிடைக்காத காரணத்தினால், கோட்டபாய ராஜபக்ஷ மீண்டும் நாடு திரும்பவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 15 ஆம் திகதிக்கு முன் வெளியேறுங்கள் பிரித்தானிய பெண்ணுக்கு உத்தரவு

காலிமுகத்திடலில் இடம்பெற்ற போராட்டத்துக்கு ஆதரவாக சமூக ஊடகங்களில் பதிவிட்ட பிரித்தானிய பிரஜையின் விசாவை குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் இரத்துச்செய்துள்ளது. இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டைவிட்டு வெளியேறுமாறும் அவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.



## மூன்று விடயங்களில்...

இருக்கும் என ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் நம்பிக்கை வெளியிட்டனர்.

சிவில் மற்றும் மனித உரிமைகள், அத்துடன் கருத்துச் சுதந்திரம் , கருத்துவேறுபாட்டு உரிமை ஆகியன முக்கியமானது என இதன்போது ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது. இலங்கையை மீண்டும் சரியான பாதையில் கொண்டு செல்ல கூட்டு ஒத்துழைப்பு நடவடிக்கை தேவை என்பது ஜனாதிபதியிடம் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிதிகளால் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை, சர்வதேச நாணய நிதியம், மனித உரிமை பேரவை ஆகிய 3 பிரதான காரணிகளுக்கு வெளிவிவகார கொள்கைகளில் முக்கியமாக கவனம் செலுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் ஜனாதிபதி ரணிலிடம் கேட்டுக்கொண்டுள்ளனர். இந்நிலையில், இந்த செயன்முறைகள் வெற்றியடைய இலங்கை அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என ஐரோப்பிய ஒன்றியம் நம்பிக்கை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரஞ்சனுக்கு பொதுமன்னிப்பு....

ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

இந்த நடவடிக்கையின் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்த சட்டமா அதிபரின் ஆலோசனை மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் அறிக்கை பெறப்பட்டதாகவும் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வழங்கப்பட்ட தண்டனையால் நீதிமன்றத்தை குறைத்து மதிப்பிடாத வகையில் மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் விஜயதாச ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

## அனைத்து கட்சிகளுக்கும் நியாயமான...

தேசிய பேரவையை ஸ்தாபிப்பதே பிரதான இலக்கு என சுட்டிக்காட்டிய அவர், அதற்கு சகல கட்சிகளின் பிரதிநிதித்துவமும் அவசியம் என குறிப்பிட்டுள்ளார். குழு அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்துவதா அல்லது அரசாங்கத்துடன் இணைவதா என்பதை அந்தந்த தரப்பினர் கலந்துரையாடி தீர்மானித்ததன் பின்னர் தமக்கு அறிவிக்குமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஜனாதிபதியின் இல்லத்திற்கு....

ஜனாதிபதி பிரதமராக இருந்த போது பயன்படுத்திய உத்தியோகபூர்வ காருக்கு 191 மில்லியன் ரூபாவும், வீட்டிற்கு ஏற்பட்ட சேதம் 14.5 மில்லியன் ரூபா எனவும் சட்டமா அதிபர் சார்பில் அரசாங்கத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார். அத்துடன், இச்சம்பவத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்காவது சந்தேகநபரான அருள் பிரகாஷை குரல் பரிசோதனைக்காக எதிர்வரும் 12 ஆம் திகதி அரசாங்க பரிசோதகர் முன்னிலையில் ஆஜர்படுத்துமாறும் கோட்டை நீதவான் திலின கமகே சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்டார்.

## கொவிட் தொற்றால் மட்டக்களப்பில்...

இவர் கடந்த திங்கட்கிழமை (8) நீரிழிவு நோய் காரணமாக மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவருக்கு மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டது.

# மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு புதிய அத்தியட்சகர் நியமனம்



**(சுதா)**

மட்டக்களப்பு சிறைச்சாலை வரலாற்றில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவர் சிறைச்சாலை அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பு சிறைச்சாலையில் அத்தியட்சகராக கடமையாற்றிய எஸ்.எல். விஜயசேகர இடமாற்றம் பெற்றுச் சென்றதன் பின்னர் புதிய சிறைச்சாலை அத்தியட்சகராக நல்லையா பிராகரன் இலங்கை சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 2017 ஆம் ஆண்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் பிரதம ஜெயிலராக கடமையாற்றிய இவர் அதே ஆண்டில் சுப்றா கிரோட்டில் சித்தியடைந்து பதவியுயர்வு பெற்று 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் பிரதம ஜெயிலராக கடமையாற்றியுள்ளார்.

அதன்பின்னர் சிரேஸ்ட தரத்தை சேர்ந்த இவர் 2020 ஆண்டு இலங்கையில் பெரிய சிறைச்சாலையான தும்பாறை மற்றும் போகம்பர ஆகிய சிறைச்சாலைகளில் உதவி அத்தியட்சகராக கடமையாற்றிய பின்னர் 2021 களில் வவுனியா சிறைச்சாலையில் உதவி அத்தியட்சகராக கடமையாற்றிவந்த நிலையில் நாளை 12.08.2022 திகதி முதல் மட்டக்களப்பு சிறைச்சாலையின் புதிய அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கியு.ஆர் முறையில் மட்டும் எரிபொருள் வழுங்குவதில் சிக்கல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் ஒரே நேரத்தில் வழங்கப்பட்ட எரிபொருளின் அளவு மற்றும் ஞசு கொடுக்கப்படும் எரிபொருளின் அளவு சமமாக இருக்க வேண்டும் என்றும், அரச நிறுவனங்களின் வாகனங்கள் ஞசு குறியீட்டில் சேர்க்கப்படாமல் எரிபொருளை பெற்றுக்கொள்வதால் எரிபொருள் நிரப்பு நிலைய நிர்வாகம் சிக்கலுக்கு உள்ளாகியுள்ளதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். மனிதாபிமான அடிப்படையில் ஞசு குறியீடு இல்லாமலேயே எரிபொருள் வழங்கப்பட வாய்ப்பு உள்ளதாகத் தெரிவித்த அவர், வைத்தியசாலையில் அனுமதிப்பதற்காக எரிபொருள் கேட்கும்போது மறுக்க முடியாது என எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

# 1,100 போதை மாத்திரைகளுடன் மாவடிச்சேனையில் ஒருவர் கைது



போதை மாத்திரைகளுடன் 41 வயதுடைய சந்தேக நபரொருவர் ஓட்டமாவடி மாவடிச்சேனையில் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து சுமார் 1,100 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இவர் ஓட்டமாவடி பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய வாழைச்சேனைப் பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இவர் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு எரிபொருளின் அளவு அதிகரிக்க வேண்டும்

நாட்டில் 24மணிநேரமும் சேவை செய்கின்றவர்களாக ஊடகவியலாளர்கள் உள்ளனர். ஒரு நாள் பொழுதில் எத்தனை மணித்தூரம் பயணிக்க இருக்கின்றோம் என்பது கூட தெரியாமல், மக்களுக்காக களத்தில் நின்று செய்து சேகரிக்கும் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு தற்போது கியு.ஆர் முறை ஊடாக வழங்கப்படும் எரிபொருள் போதுமானதாகவில்லை. இதேவேளை பொதுப்போக்குவரத்தினைப் பயன்படுத்தி செய்தியும் சேகரிக்க முடியாது. அவ்வாறான ஊடகவியலாளர்களுக்கு வாரத்திற்கு ஒதுக்கப்படும் எரிபொருளின் அளவினை அதிகரிக்க வேண்டும். இதற்கு மாவட்ட அரச அதிகாரிகளும் உரிய உயர்மட்டத்துடன் பேசி, பிராந்திய ஊடகவியலாளர்களின் பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேவேளை எரிபொருள் அமைச்சும் இதனைக் கவனத்திலெடுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் பிராந்திய ஊடகவியலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய தேசமகாசபை பொதுக்கூட்டம்

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய தேசமகாசபை பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை(14)காலை 10மணிக்கு ஆலய முன்றலில் வண்ணக்கர் தலைவர் பூ.சுரேந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது, இக்கூட்டத்தில் புதிய நிருவாகத்தெரிவு, தேரோட்ட மகோற்சவம் பற்றிய கலந்துரையாடல்களும் இடம்பெறவுள்ளது.

# திருகோணமலை மாவட்டத்தில் போதைப்பொருள் விற்பனை அதிகரிப்பு

**எப்.முபாரக்**

நாட்டில் தற்போது போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்ற நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் போதைப்பொருள் விற்பனை அதிகரித்து வருகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் ஹெரோயின் போதைப்பொருள் கேரள கஞ்சா மற்றும் போதை மாத்திரைகளை பாவிப்பவர்களின் வீதம் அதிகரித்து வருகின்ற நிலையில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் திருகோணமலை பிராந்திய அதிகாரிகள் தொடர்ச்சியாக சுற்றி வளைப்புக்களை மேற்கொண்டு சந்தேகநபர்களை கைது செய்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று(10) கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டி. சந்தியில் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபரொருவரை கைது செய்துள்ளதாக பிராந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவின் திருகோணமலை பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அவரை சோதனையிட்டபோது அவரிடம் இருந்து 5 கிரேம் 600 மில்லி கிரேம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

கிண்ணியா – பூவரசன்தீவு பகுதியைச் சேர்ந்த முகமட் சியாம் (31வயது) என்பவரை கைது செய்ததாகவும் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபரை திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறித்த நபர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இன்று இரவு வரும் பெற்றோல் கப்பல்

35,000 மெற்றிக் தொன் பெற்றோலுடனான கப்பல் ஒன்று இன்று (11) இரவு கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பெற்றோலுக்கான கொடுப்பனவுகள் நேற்று (10) செலுத்தப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

# அபிவிருத்தி குழு தலைவர் பதவி கூட்டமைப்பு ஏற்காது

மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் பதவினை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருபோதும் ஏற்க மாட்டோம் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் தெரிவித்தார்.

சமகால அரசியல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் “தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் ஏனைய கட்சிகள் குறிப்பாக விக்னேஸ்வரன் ஐயா மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை வடக்கு கிழக்கில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்களின் தலைவர்களாக நியமனம் செய்ய முடிவெடுக்கப்பட்டமை தொடர்பான செய்திகள் வெளி வந்திருக்கின்றன அது தொடர்பிலே பல்வேறுப்பட்ட கருத்துக்கள் நியாயங்கள் எங்களிடம் கேட்கப்படுகின்றது.

குறிப்பாக தமிழ் மக்கள் தங்களுடைய அன்றாட பிரச்சினைகளாக பல விடயங்களை சந்தித்து கொண்டிருக்கின்றார்கள் அது தொடர்பில் நாங்கள் டலஸ் அழகபெரும அவர்களுக்கு எழுதிக் கொடுத்த விடயங்களையே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியை சந்தித்தபோதும் இந்த விடயங்களை அவருக்கு கூறி இருக்கின்றோம்.

# ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்து படமெடுத்த இரு பெண்கள் கைது



கொழும்பு – கோட்டை ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்து ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்து புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்ட இரு பெண்களை கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இன்று (11) கைது செய்துள்ளனர். அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மொரட்டுவ பிரதேசத்தில் வசிக்கும் இரண்டு பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் பாணந்துறை பிரதேசத்தில் இரண்டு வர்த்தக நிலையங்களை நடத்திவருவதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# வடகிழக்கு தமிழ் பிரதிநிதித்துவம் அரசியலால் குறைவடைகின்றது

**- இரா.சாணக்கியன் -**

கடந்த 2004ஆம் ஆண்டு 25 ஆக இருந்த வடகிழக்கு தமிழ் பிரதிநிதித்துவம் தற்போது வட கிழக்கு தமிழர்களுக்கு எதிரான பேரினவாத அரசியல் செயல்பாடுகளினால் குறைவடைந்து வருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று(புதன்கிழமை) நடைபெற்ற ஜனாதிபதியின் சிம்மாசன உரையின் மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போது மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், 'நாட்டில் 74 வருடங்களாக ஆட்சி செய்த ஜனாதிபதிகள் மற்றும் பிரதமர்கள் பல உரைகளை பாராளுமன்றில் ஆற்றியிருந்தாலும் இந்த நாட்டினதும், நாட்டு மக்களினதும் எதிர்காலத்தை தீர்மானிப்பது பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த ஜனாதிபதி ஒருவர் என்பது சகலரும் அறிந்ததே இலங்கையராக அனைவரும் ஒன்றினைந்து வாழ வேண்டும் என குறிப்பிட்டாலும் கூட ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிக்கு தமிழ் பேசும் ஒருவர் தெரிவு செய்யப்படவில்லை. விரும்பினாலும், விரும்பாவிடினும் பெரும்பான்மையாளரில் ஒருவரை தலைவராக தெரிவு செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

எமது மக்களின் வாக்குகளினால் ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேரதலில் போட்டியிட்ட சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு வழங்க வேண்டிய நிலைப்பாடு இருந்தது. 2015ஆம் ஆண்டு பொது வேட்பாளராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தோம். அதே போலதான் தொடர்ச்சியாக தேர்தலில் இரு வேட்பாளர்களின் எவர் சிறந்தவர் என ஆராய்ந்து அவருக்கு ஆதரவு வழங்கியுள்ளோம்.

இதுவரையில் ஆட்சியில் இருந்த அரச தலைவர்கள் அனைவரும் நாட்டு மக்களின் பொருளாதாரத்தை இல்லாதொழித்துள்ளார்கள். தமிழ் சமூகம் பொருளாதாரம் மாத்திரமல்ல அதற்கு அப்பாற்பட்ட பல இன்னல்களை எதிர்க்கொண்டுள்ளது. அவசரகால சட்டத்தை கொண்டு தற்போது தெற்கில் கைது இடம்பெறுகிறது. நாங்கள் 1979ஆம் ஆண்டு முதல் அவசரகால சட்டத்தை எதிர்த்து வருகிறோம். அவசர கால சட்டத்திற்கு எதிராக இன்று எதிர்தரப்பினர் குரல் கொடுக்கிறார்கள். தமிழ் மக்கள் அவசரகால சட்டத்தினால் பல இன்னல்களை அனுபவித்துள்ளதை நினைவுப்படுத்த வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி முன்னேற்றத்திற்கு எந்த அரசாங்கமும் உரிய நடவடிக்கையினை முன்னெடுக்கவில்லை.

தொடர்ச்சியாக தமிழ் சமூகம் ஏமாற்றப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை அபிவிருத்தி செய்த அரசாங்கம் திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவில்லை. பாலாலி விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படவில்லை, மாறாக எமது வளங்கள குறிப்பாக மண் வளம் சூறையாடப்படுகிறது.

நல்லாட்சி அரசாங்கத்தில் குற்றச்சாட்டுக்குள்ளான முன்னாள் அமைச்சர் ஹெலிகொப்டரில் மன்னாருக்கு சென்றுள்ளார். மன்னார் மாவட்டத்தில் உள்ள வளங்களை சூறையாடுவதற்கான நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப்படுகின்றன. குச்சவெளி பகுதியின் பெயரை மாற்றுவதற்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கு மாவட்டத்தில் உள்ள மீனவர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை, மறுபுறம் விவசாயிகளும் உரம் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கடந்த வருடம் வழங்கப்பட்ட அரச தொழில் நியமனத்தில் தமிழ் பேசுபவர்களில் 2000 பேருக்கு கூட தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை. ஆகவே தமிழ் மக்களின் வாழ்வாதாரம் குறித்து சிந்திக்காத தலைவர்கள் நாட்டை ஆண்டுள்ளார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதால் இனி வரும் காலங்களில் தமிழ் பிரதிநிதித்துவத்தின் வீதம் குறைவடையும் நிலை ஏற்படும்.

மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதால் நடுத்தரவர்க்கத்தினர் பெரிதளவில் பாதிக்கப்படுவார்கள். மாதம் 4 ஆயிரம் ரூபாவாக காணப்பட்ட மின்கட்டணம் இனிவரும் காலங்களில் 6 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க கூடும். மின்கட்டணம் பன்மடங்கு அதிகரித்துள்ளதால் நடுத்தர மக்கள் பொருளாதார ரீதியில் மோசமான பாதிப்புக்களை எதிர்க்கொள்வார்கள். நீர்க்கட்டணம் அதிகரிக்கவுள்ளது. ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதால் அனைத்து சேவைகளின் கட்டணமும் உயர்வடைந்துள்ளது. பொருளாதார நெருக்கடியினை ஏற்படுத்தியவர்களுக்கு கண்டிப்பாக தண்டனை வழங்க வேண்டும். தவறான பொருளாதார முகாமைத்துவத்தினால் நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் இன்று மீண்டும் ஒன்றினைந்துள்ளார்கள். பொருளாதார நெருக்கடியினை ஏற்படுத்தியவர்களுக்கு தண்டனை வழங்குவது குறித்து ஜனாதிபதி தனது சிம்மாசன உரையில் குறிப்பிட்டிருந்தால் அது மகிழ்வுக்குரியதாக அமைந்திருக்கும்.' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தலைமன்னார் புனித றோன்சியார் ஆலய பெருவிழா







**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மறைமாவட்டத்தில் பழமைவாய்ந்த தலைமன்னார் பங்கின் பாதுகாவலராம் புனித லோறன்சியாரின் ஆலய வருடாந்த விழா தலைமன்னார் பங்கு தந்தை அருட்பணி மாக்கஸ் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற ஒன்பது தினங்கள் நவநாட்களைத் தொடர்ந்து புதன்கிழமை (10.08.2022) இவ் ஆலய பெருவிழா இடம்பெற்றபோது மன்னார் மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் பெருவிழா கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுப்பதையும் –இதைத் தொடர்ந்து திருச்சுரூப பவனியும் இவ் விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு ஆயரால் திருச்சுரூப ஆசீரும் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்

# அரகலய செயற்பாட்டாளர்களின் கைதுகள் வன்மையாக கண்டிக்கத்தக்கது

அரகலய செயற்பாட்டாளர்களின் வீணாண கைதுகளை வன்மைமாக கண்டிப்பதாக கிண்ணியா நகர உறுப்பினர் எம்.எம்.நசுருதீன் தெரிவித்தார். சபையின் 53ஆவது அமர்வு நேற்று (10) தவிசாளர் எம்.எம். நிவாஸ் தலைமையில் கூடியது. இதன் போது பிரேரனை ஒன்றை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றுகையில்

ஆட்சியாளர்களின் ஊழல். மோசடி வீண்விரயம் என்பவற்றால் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி பொருட்களுக்கான விலையேற்றம், எரிபொருள் எரிவாயு தட்டுப்பாடு தாங்க முடியாத வாழ்க்கைச் செலவு பசி பட்டனி என்பவற்றால் தாக்கமடைந்த மக்கள் வீதிக்கி இறங்கி நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாப்பதற்காக காலிமுகத்திடலில்அரகலய என்றபெயரில்ஜனநாயகவழியில் போராடிய அனைத்து வகையான செயற்பாட்டாளர்களை கைது செய்யும் அரசாங்கத்தின் அராஜக நடவடிக்கை யினை வண்மையாக கண்டிப்பதோடு ஜனாதிபதியும் அரசாங்கமமும் அதி உச்சபட்ச சர்வாதிகார நடவடிக்கை யினை உடன் நிறுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

# கல்முனையில் மாட்டிறைச்சிக்கான கட்டுப்பாட்டு விலை தொடர்பில் கலந்துரையாடல்



**பாறுக் ஷிஹான்**

கல்முனையில் மாட்டிறைச்சிக்கான கட்டுப்பாட்டு விலையை அமுல்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் மாட்டிறைச்சிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைகளை அமுல்படுத்துவது தொடர்பில் மாட்டிறைச்சி வியாபாரிகள் மற்றும் மாடு விநியோகஸ்தர்களுடனான முக்கிய கலந்துரையாடல் ஒன்று கல்முனை மாநகர சபையில், மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் அவர்கள் தலைமையில் செவ்வாய்க்கிழமை (09) இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட், மாநகர சபையின் கணக்காளர் எம்.எம்.ரியாஸ், கால்நடை வைத்திய அதிகாரி வட்டப்பொல உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். நாட்டின் அசாதாரண சூழ்நிலை மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மாட்டிறைச்சியின் விலை முறையற்ற விதத்தில் அதிகரிக்கப்பட்டிருப்பதால், மக்கள் அதனைக் கொள்வனவு செய்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதை கருத்தில் கொண்டு, கடந்த 03ஆம் திகதி புதன்கிழமை மாட்டிறைச்சி வியாபாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து 01 மப மாட்டிறைச்சி (200ப எலும்பு அடங்கலாக) 1600 ரூபாவுக்கும் தனி இறைச்சி 1800 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என முதல்வரினால் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் கடந்த 05ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மாடு விநியோகஸ்தர்களுடனான கலந்துரையாடலிலும் இந்த நிர்ணய விலை குறித்து ஆராயப்பட்டிருந்ததுடன் மாடு விற்பனையின்போது முடியுமானவரை விலையை குறைத்து வழங்குமாறு முதல்வரினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் கட்டுப்பாட்டு விலையை அமுல்நடத்துவதில் மாநகர சபைக்கும் இறைச்சிக் கடைக்காரர்களுக்குமிடையே இழுபறி காணப்பட்டு வந்தது. இதனால் பெரும்பாலான இறைச்சிக்கடைகள் 06ஆம் திகதி சனிக்கிழமை முதல் திறக்கப்படாமல் இருந்து வருகின்றன.

இந்நிலையில், மாட்டிறைச்சி வியாபாரிகளும் மாடு விநியோகஸ்தர்களும் இன்று ஒரே மேசைக்கு அழைக்கப்பட்டு, முதல்வர் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதன்போது நீண்ட நேர வாதப்பிரதிவாதங்களையடுத்து 01 மப மாட்டிறைச்சி (200ப எலும்பு அடங்கலாக) 1700 ரூபாவுக்கும் தனி இறைச்சி 1900 ரூபாவுக்கும் விற்பனை செய்வதற்கும் கட்டாயம் டிஜிட்டல் தராசை பயன்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதனை மீறுவோரின் இறைச்சிக்கடை வியாபார உரிமம் இரத்து செய்யப்படும் என இதன்போது முதல்வரினால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

# ஜனாதிபதியை சந்தித்த முஸ்லிம் காங்கிரஸ்

**நூருல் /ஹுதா உமர்**

முஸ்லிங்களின் காணிப்பிரச்சினைகள் தொடக்கம் பல்வேறு முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடனான சந்திப்பில் கலந்துரையாடியதாக முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் சார்பிலான திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுவினருக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்குமிடையில் புதன்கிழமை இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், இந்த சந்திப்பின் போது சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பிலும், பாராளுமன்ற விடயங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுவினருடன் ஆழமாக கலந்துரையாடியதாக தெரிவித்தார்.

மேலும் அண்மையில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிகழ்த்திய ஆசன உரையை பாராட்டிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுவினர் ஜனாதிபதியிடம் முஸ்லிங்கள் சார்பில் பல அம்ச கோரிக்கைகளை முன்வைத்தனர். அதில் சம்மாந்துறை மற்றும் மூதூர் போன்ற உள்ளூராட்சி மன்றங்களின் தரமுயர்த்தல் உட்பட ஏனைய சில உள்ளூராட்சி மன்றங்களில் உள்ள நிர்வாக முரண்பாடுகளை தீர்த்தல், கிழக்கு மாகாண பிரதேச செயலகங்களில் உள்ள நிர்வாக முரண்பாடுகளுக்கு தீர்வை காணுதல், விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளுக்கும், மீனவர்களின் மீன்பிடிக்குமான எரிபொருளை தங்குதடையின்றி பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல், முஸ்லிங்களின் காணிப்பிரச்சினைகள் உட்பட முஸ்லிங்களின் முக்கிய பல பிரச்சினைகள் தொடர்பில் தீர்வுகளை நாடி கோரிக்கைகளை முன்வைத்து வலியுறுத்தப்பட்டதாக தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் முன்னாள் அமைச்சர் சட்டத்தரணி ரவூப் ஹக்கீம், முன்னாள் இராஜாங்க அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களுமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், பைசால் காஸிம், முன்னாள் பிரதியமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். தௌபீக், கட்சியின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், உயர்பீட உறுப்பினர் நயீமுல்லா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# தேசிய மட்ட பளு தூக்கல் போட்டியில் தென்மராட்சி இளைஞன் சாதனை

**சாவகச்சேரி நிருபர்**

கொழும்பு பண்டாரகமவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தேசிய மட்ட பளு தூக்கல் போட்டியில் சாவகச்சேரி இளைஞன் ச.புசாந்தன் மூன்று பிரிவுகளில் முதலிடங்களைப் பெற்று புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் பழைய மாணவனான புசாந்தன் குறித்த போட்டியில் முதல் பிரிவில் 350கிலோகிராம்,2வது பிரிவில் 175மப,இறுதிப் பிரிவில் 261மப என மொத்தமாக 786கிலோ எடையினை தூக்கி புதிய சாதனை படைத்துள்ளார்.

குறித்த போட்டியில் 25மாவட்டங்களையும் சேர்ந்த 44போட்டியாளர்கள் கலந்து கொண்ட நிலையில் யாழ் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி புசாந்தன் மாத்திரமே கலந்துகொண்டு சாதனையை நிலையாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் உள்ளக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்




**பாறுக் ஷிஹான்**

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் உள்ளக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கி தமிழ் தேசிய கூட்டமைப்பினை வழிநடத்த வேண்டும்.சாணக்கியன் போன்ற இளைஞர்களுக்கு கட்சிக்குள் முன்னுரிமை வழங்க வேண்டும் என அரசாங்க பொது ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சங்கத்தின் கல்முனை தலைமையகத்தில் இன்று ஊடகவியலாளர் சந்திப்பு மேற்கொண்டு அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் குறிப்பிட்டதாவது

தமிழ் மக்கள் கூட தமிழ் தலைமைகளை ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. காரணம் அநேகமாக மக்கள் பிரச்சினை தீர்க்கப்படாமைஆகும்.எதிர்கட்சிதலைவராக கடந்த காலங்களில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இருந்து கொண்டு ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஆட்சிக்கு ஆதரவாக செயற்பட்டவர்.இவ்வாறு தங்களது மாவட்டங்களில் அகதி வாழக்கை வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களிற்கான தீர்வினை பெற்றுக்கொடுக்காத தலைவராக இருந்து கொண்டு இருப்பதனால் ஏனைய மாவட்டங்களை பற்றி சிந்திக்க மாட்டீர்கள்.

உங்களுக்கு வாக்களித்த மக்களையே மாவட்ட நிலையில் மறந்து வருகின்றீர்கள்.எனவே தான் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கட்டுக்கோப்பு இல்லாமல் போய் உள்ளது.இதற்கு காரணம் தலைமைத்துவம் தான்.சரியான வழிநடத்தல் இன்மையினால் தான் இந்நிலை தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு ஏற்பட்டுள்ளது.தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழரசுக்கட்சிக்கு மாத்திரம் உரித்தானது என கடந்த கால செயற்பாடுகள் சென்று கொண்டிருக்கின்றது. இனிவரும் காலங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஒற்றுமையினை ஏற்படுத்துவது என்பது சிரமம்.இந்த பிரிவுகளை நீங்களாகவே ஏற்படுத்தி கொண்டுள்ளீர்கள்.20 வருடங்கள் நம்பி கெட்ட பின்னர் தான் தமிழ் தேசிய கூட்டமைப்பினை விமர்சிக்கின்றோம்.கடந்த காலங்களில் தொழிலாளர் வர்க்கம் தமிழ் தேசிய கூட்டமைப்பினை நம்பி இருந்தது.

ஏனெனில் கடந்த காலங்களில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக இருந்தீர்கள்.அக்காலத்தில் மக்கள் உங்களை அங்கீகரித்திருந்தார்கள். நாங்களும் அச்சந்தர்ப்பத்தில் உங்கள் பின்னால் வந்தோம்.ஒழுங்கான வழிநடத்தல் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இன்மையால் தான் கடந்த 32 வருடங்களாக இணைந்து செயற்பட்ட நாம் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டோம். நாங்கள் உண்மையில் தமிழ் தேசியத்தை மதிக்கின்றவர்கள்.போராட்டங்களை மதிக்கின்றவர்கள்.அண்ணன் பிரபாகரனின் போராட்டங்களை கூட மதித்திருக்கின்றோம். தமிழீழ விடுதலை புலிகளோ அல்லது பிரபாகரனோ தற்போது இருந்திருந்தால் எமது தொழிற்சங்க உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலோ அல்லது மாகாண சபையிலோ உறுப்பினர்களாக இருந்திருப்பார்கள்.

ஏனெனில் எமது பாதை சரியானது.இதனை நீங்கள்(தமிழ் தேசிய கூட்டமைப்பு)புரிந்து கொள்ளவில்லை. எங்களை போன்ற ஒரு தலைவர்களை வழிநடத்த தமிழ் தேசிய கூட்டமைப்பு முயற்சிக்கவில்லை.ஆகவே தான் உலக தமிழ் மக்களும் தொழிற்சங்கங்களும் தற்போது ஆதரவினை தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு வழங்குவதை குறைத்து வருகின்றார்கள் என்பதே உண்மையாகும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் உள்ளக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கி தமிழ் தேசிய கூட்டமைப்பினை வழிநடத்த வேண்டும்.சாணக்கியன் போன்ற இளைஞர்களுக்கு கட்சிக்குள் முன்னுரிமை வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

# முஸம்மில் மொஹிதீனை கிழக்கு ஆளுனராக நியமிக்கவும்

### சிவில் அமைப்புக்கள் ஜனாதிபதியிடம்



**எப்.முபாரக்**

கிழக்கு மாகாண ஆளுனராக ஐக்கிய தேசிய கட்சியின் பங்காளி கட்சியான தேசிய விடுதலை மக்கள் முன்னணி கட்சியின் தலைவர் முஸம்மில் மொஹிதீன் அவர்களை கிழக்கு மாகாண ஆளுனராக நியமிக்குமாறு கிழக்கிலுள்ள பல சிவில் அமைப்புக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள். கிழக்கு மாகாணத்தில் ஆளுனராக தமிழ் பேசுகின்ற ஒருவரேயே கிழக்கு ஆளுனராக நியமிக்க வேண்டுமெனவும் கிழக்கினை சேர்ந்தவராக இருக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுளெளளது.

தேசிய விடுதலை மக்கள் முண்ணனியின் கட்சியின் தலைவர் இன மத பேதமற்ற ஒருவர் இவ்வாரான ஒருவரே கிழக்கு மாகாணத்திற்கான ஆளுனராக நியமிக்க வேண்டும்.

மேலும் முஸம்மில் மொஹிதீன் கடந்த பொதுத்தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் ஐ.தே.கட்சி சார்பாக போட்டியிட்டதோடு,கிழக்கு மாகாணத்திற்கு பொறுத்தமான நபராக தாம் இவரை நோக்குவதாகவும் பல சிவில் அமைப்புக்கள் இணைந்துஜனாதிபதியிடம் இக்கோரிக்கையினை முன்வைத்துள்ளார்கள்.

# அறுகம்பை சுற்றுலா மையத்திற்கு அதிகளவான உல்லாச பிரயாணிகள் படையெடுப்பு

**பாறுக் ஷிஹான்**

அம்பாறை அறுகம்பை சுற்றுலா மையம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் வீழ்ச்சியடைந்து தற்போது அதிலிருந்து மீண்டு வருவதை அவதானிக்க



முடிகின்றது. இயற்கை எழில்மிகு பிரதேசங்கள் பலவற்றைக் கொண்டமைந்த எமது இலங்கைத் தேசமானது மன்னர்களின் ஆட்சி காலம் முதல் மக்களாட்சி காலம்வரை மக்களின் பொழுதுபோக்கு சொர்க்கபுரியாகவே இருந்து வருகின்றது. இங்கு இயற்கையாகவே கொண்டமைந்த துறைமுகங்கள், வனப் பிரதேசங்கள், வானைத் தொடும் மலை முகடுகள், அதிலிருந்து ஊற்றெடுக்கும் கங்கைகளுடன் பறவையினங்கள் போன்றவைகள் எல்லாம் அழகிற்கு அழகு சேர்ப்பனவாக உள்ளன. இதனால் தான் இலங்கை தீவு உல்லாசப் பயணிகளின் பயணப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளதெனலாம்.

எமது நாட்டிற்கு வருகை தரும் உல்லாசப் பயணிகள் ஒரேயொரு முறையுடன் பயணத்தை நிறுத்திக் கொள்ளாது வருடா வருடம் தமது பயணத்தை மேற்கொள்கின்றனர். இதற்கு எமது நாட்டின் பூகோள அமைப்பே பிரதான காரணமாக அமைந்துள்ளது. அதாவது 12 மணி நேரத்தில் சூடு, குளிர் மிதமான காலநிலையினை அனுபவிக்கக் கூடிய ஒரே ஒரு நாடாக உள்ளதே மூலகாரணம் என கூற முடியும். காலையில் அம்பாறை அறுகம்பை கடற்கரையில் கடலலை சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டு விட்டு மதியம் நுவரெலியாவில் ஓய்வு எடுக்கக் கூடிய சூழ்நிலை இருப்பது எமது நாட்டிற்கு அதிக மதிப்பெண்ணாக உள்ளதெனலாம்.

முன்னர் யுனஸ்கோவினால் அறிவிக்கப்பட்ட புராதன இடங்களுக்கு மட்டுமே சென்று வந்த சுற்றுலாப் பயணிகள் தற்போது அதிகளவில் கரையோரப் பிரதேசங்களின் எழில்மிகு அழகிய காட்சிகளை கண்டு அனுபவிக்கும் சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. இதன் மூலமாக அதிக நாட்கள் நாட்டில் தங்கியிருக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படலாயிற்று. இதனால் எமது நாட்டின் அந்நிய செலாவணி வருமானத்தில் கணிசமான அதிகரிப்பு தோன்றியுள்ளது.

எமது நாட்டில் உல்லாசப் பயணிகளை அதிகம் கவர்ந்திருக்கின்ற இடங்களில் ஒன்றாக அம்பாறை மாவட்டம் அறுகம்பை முக்கிய இடத்தில் உள்ளதெனலாம். இந்த அறுகம்பை ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின்பிருந்தே அந்நியர்களின் சிறிய மீன்பிடித்துறைமுகமாகவும் பொழுதுபோக்கு இடமாகவும் இருந்துள்ளது.

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில் பிரசே செயலகப் பிரிவில் அறுகம்பே இலங்கையிலுள்ள சுற்றுலாத் தலங்களில் இது மிகவும் புகழ்பெற்ற ஒன்றாகும். 1996ம் ஆண்டு இலங்கை அரச வர்த்தமானி அறிவித்தல் மூலம், அறுகம்பே, சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டது. அறுகம்பே இயற்கையினால் அழகு நிறைந்த பகுதியாகும்.குறிப்பாக, இங்குள்ள கடற்கரை சுற்றுலா பயணிகள் மிகவும் விரும்புகிற ஒன்றாகும். மேலும், "சர்பிங்" எனப்படும் கடலலைச் சறுக்கு விளையாட்டுக்கு, உலகளவில் மிகவும் சிறந்த இடங்களில் அறுகம்பேயும் ஒன்றாக புகழ்பெற்றுள்ளது.ஏப்ரல் முதல் ஆகஸ்ட் மாதம் வரை உலக நாடுகளில் இருந்து அறுகம்பே பகுதிக்கு அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். இதனால், தற்போது சுற்றுலாப் பயணிகளால் அறுகம்பே களைகட்டியுள்ளது.ஆஸ்திரேலியா, சுவிட்ஸர்லாந்து, ஜெர்மனி, பின்லாந்து, ஸ்பெயின், இஸ்ரேல் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து அறுகம்பே பகுதிக்கு அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

இலங்கையில் கொரோனா தொற்றுநோய் எரிபொருள் நெருக்கடி காரணமாக அறுகம்பே பகுதிக்கு சிறிதளவு சுற்றுலாப் பயணிகள்தான்வருகை தந்திருந்தனர். ஆனால் தற்போது அந்த எண்ணிக்கை பல மடங்காக இன்று அதிகரித்துள்ளது.அறுகம்பேயில் தங்கும் விடுதிகள் உணவுச்சாலைகள் தற்போது உல்லாச பிரயாணிகளின் வருகையினால் புத்துயிர் பெற்று வருகின்றன. வெளிநாட்டவர்கள் மட்டுமன்றி உள்நாட்டவர்களும் அறுகம்பே பகுதிக்கு அதிகளவில் சுற்றுலாப் பயணிகளாக



வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இப்பகுதி மக்கள் 2019 ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவம் மற்றும் இந்நாட்டை பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகிய கொவிட் – 19 நோய்தொற்று காரணமாக பொருளாதார மற்றும் இயல்பு வாழ்வில் பாதிப்பிற்கு உள்ளாகியதுடன் உல்லாச பிரயாணிகளின் வருகை குறைந்தமையினால் தமது வாழ்வாதாரத்தையும் இழந்து வெளி மாவட்டங்களுக்கு தற்காலிகமாக சென்றிருந்தனர்.

தற்போது நாடு மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பி வருவதனால் இடம்பெயர்ந்து சென்றவர்கள் மீளவும் குடியேறி தமது ஜீவனோபாய தொழிலை உல்லாச பிரயாணிகளுடன் இணைந்து கொண்டு செல்கின்றனர்.கொவிட் 19 தொற்று காரணமாக வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகை இவ்வாண்டின கடந்த மாதங்களில் இல்லாததானாலும் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் வருகை குறைவாக காணப்படுவதாலும் பல சுற்றுலாத் தளங்கள் சோபை இழந்திருக்திருக்கிறது. இதனால் சுற்றுலாத்துறைசார்ந்த தொழில் புரிவோரின் வருமானம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இன்று இலங்கையின் கிழக்கு மாகாண மாவட்டங்களான திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பல பிரசித்தி பெற்ற சுற்றுலாத்தளங்கள் களை கட்ட ஆரம்பித்துள்ளன. திருகோணமலை மாவட்டத்தின் நிலாவெளிக் கடற்கரை, மாபில் கடற்கரை, திருகோணஸ்வர ஆலயம், கண்ணியா சுடுநீர் கிணறு போன்ற பிரதேசங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் பாசிக்குடா, அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் உல்லை மற்றும் அருகம்பை ஆகிய பிரதேசங்கள் பிரசித்தி பெற்ற சுற்றுலாத்தளங்களை நாடி உல்லாச பிரயாணிகள் படையெடுத்துள்ளனர்.

மேலும் இது தவிர இச்சுற்றுலாத்தளங்கள் அபிவிருத்தி செய்யப்படாமலும், இத்தளங்களுக்குரிய முறையான போக்குவரத்து கட்டமைப்பு உருவாக்கப்படாமலும் காணப்படுவதனால் இத்தளங்களை நோக்கிய சுற்றுலாப் பயணிகளின் வருகை குறிப்பிட்டுச் சொல்லத்தக்களவு வளர்ச்சியடைந்ததாகக் காணப்படவில்லை என்றுதான் கூற வேண்டும்.

எதிர்காலத்தில் இப்பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு போக்குவரத்துக் கட்டமைப்புக்களும் முறையாக நடைமுறைப்படுத்தப்படுமானால் இச்சுற்றுலாத்தளங்களினூடாக பிரதேச இளைஞர் யுவதிகள் தொழில் வாய்ப்பைப் பெற காரணமாக அமையும் .கிழக்கில் வருமானம் ஈட்டித்தரக் கூடிய துறையாக காணப்படும் உல்லாசத் துறையை அபிவிருத்தி செய்வதிலும் உல்லாசப் பயணிகளைக் கவர்வதிலும் கடந்த காலங்களில் முழுக் கவனம் செலத்தி வந்தாலும் அதற்கான விரைவானதும் திருப்பதிகரமானதுமான போக்குவரத்துக் கட்டமைப்பு உருவாக்கப்படவில்லை.

உலகிலுள்ள கடற்கரைப் பிரதேசங்களை அண்மித்த குடா பகுதிகளில் மிகவும் இயற்கையான குடாவாக அறுகம்பைக்குடா இருப்பதாக வெளிநாட்டு பயண கையேடுகளில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இதனுடன் இணைந்ததாக சர்வதேச ரீதியில் கடலலைச் சறுக்கு விளையாட்டுக்கு மிக பொருத்தமான இடமாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் அறுகம்பை பிரதேசம் மேற்குல உல்லாசப் பயணிகளின் வருகையினால் களைகட்டியுள்ளது. குறிப்பாக ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல், மே, ஜ•ன், ஜ•லை, ஓகஸ்ட், செப்டம்பர் வரை இப்பகுதி மிகுந்த சுறுசுறுப்பாகவே காணப்படும். சுற்றுலாப் பயணிகளுடன் தென்பகுதி, மீனவர்களின் வருகை இப்பகுதியில் மிகுதியாக காணப்படுவதால் பதப்படுத்தப்படாத புத்தம்புதிய கடலுணவுகளை சுவைப்பதில் வெளிநாட்டவர்களுடன் உள்ளூர் மக்களும் ஈடுபட்டுள்ளதை காணமுடியும்.

தற்போது இங்கு வருகை தந்துள்ள உல்லாசப் பயணிகளில் பெரும் பகுதியினர் தமது குழந்தைகளுடன் குடும்பமாக வருகை தந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. மாலை வேளைகளில் அறுகம்பை குடா கடற்கரை நீர்ச் சறுக்கு விளையாட்டு, படகுச் சவாரி, கடற்குளியல், மீன்பிடி என களைகட்டியிருக்கும், உள்ளூர் பயணிகள் தமது வாகனங்களை நிறுத்துவதில் பாரிய இடநெருக்கடியினை எதிர்கொண்டு வருகின்றார்ள்.

அறுகம்பைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் இக்கடற்கரைப் பகுதியை மட்டும் அனுபவிப்பது கிடையாது. இதனை அண்மித்துள்ள குமண பறவைகள் சரணாலயத்திற்கும் சென்று வருகின்றார்கள். அறுகம்பையிலிருந்து சுமார் 15 கிலோமீற்றர் தொலைவிலுள்ள உகந்தை முருகன் ஆலயத்தின் பின்புறமாகவே குமண சரணாலய பிரதான நுழைவாயில் அமைந்துள்ளது. உல்லாசப் பயணிகள் சரணாலயத்திற்கு செல்வதற்கு முன் உகந்தை முருகனை தரிசித்து புகைப்படம் பிடித்து அவரது அருளைப் பெற்றுக் கொள்வதுடன் கூட்டம் கூட்டமாக வலம்வரும் மான் மயில் கூட்டங்கள், பட்சிகளின் ஓசைகளை அனுபவிப்பவர்களாகவும் உள்ளார்கள் என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

# வன்முறை, தீவிரவாதத்துக்கு எதிரான வீதி நாடகம்



**பைஷல் இஸ்மாயில்**

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர்களால் வழங்கிய 'வன்முறை ராசா' வீதி நாடகம் அட்டாளைச்சேனை பிரதான வீதியில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. பண்பாட்டு வாழ்வியலின் ஊடாக நல்லிணக்கத்தை கொண்டு வருதல், வன்முறை தீவிரவாதத்தில் இருந்து விடுபடுவதற்கு மனிதர்கள் எடுக்கின்ற முன்னெடுப்புகளும் செயற்பாடுகளும் இயல்பான பண்பாட்டு நடவடிக்கைகளும் இந்நாடகத்தின் கருவாக அமைந்தது.

மேலும் சாதியல் பிரிவினைகளை ஏற்படுக்காது அனைவரும் வன்முறையற்ற வாழ்க்கையை வாழ்வதுடன் சுமுகமான வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதே அதன் வெளிப்பாடாக அமைந்திருந்தன.

இறுதியில் அனைவரும் ஒற்றுமையாகவும் வன்முறையற்ற வாழ்க்கையை வாழ்வதற்கு நல்லிணக்கத்தின் முக்கியத்துவதங்களையும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளையும் அதனால் நாளாந்தம் மக்கள் அனுபவிக்கும் சவால்களையும் பேசுகின்றது. அனைவரும் வன்முறை இல்லாமல் ஒற்றுமையாக எவ்வாறு வாழலாம் என்பதை இந்நாடகம் அழகாக புலப்படுத்தியது.

# இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட சம்மேளன புதிய நிர்வாகத் தெரிவு



**நூருல் /ஹுதா உமர்**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் கழக அம்பாறை மாவட்ட சம்மேளனம் நடாத்திய 2022 ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத்தெரிவுக்கூட்டம் அம்பாறையில் இடம்பெற்றது. அம்பாறை மாவட்ட இளைஞர் சம்மேளனத்தின் புதிய தலைவராக அக்கரைப்பற்று இளைஞர் கழக சம்மேளன தலைவர் ஊடகவியலாளர் எம்.எம்.றுக்ஸான் தெரிவுசெய்யப்பட்டதுடன் செயலாளராக பதவி வழியில் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியும், பொருளாளராக சாய்ந்தமருது இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தின் தலைவர் ஊடகவியலாளர் ஹிஸாம் ஏ பாபாவும், அமைப்பாளராக அம்பாறையை சேர்ந்த கே.எச். எம்.டி.மதுசங்கவும் தெரிவு செய்யப்பட்டனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உத்தியோகத்தர்கள், அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த இளைஞர் சேவை அதிகாரிகள், பிரதேச செயலக இளைஞர் கழக சம்மேளனத்தின் பிரதிநிதிகளின் எனப்பலரும் கலந்துகொண்ட இந்த நிர்வாகத்தெரிவுக்கூட்டத்தில் உப தலைவர்களாக சம்மாந்துறையை சேர்ந்த டீ .எம். தஹ்ஸீன், கல்முனையை சேர்ந்த கே. திலக்சன் ஆகியோரும், உப செயலாளர்களாக அட்டாளைச்சேனையை சேர்ந்த ஏ.சி.எம். ரிப்கான், அம்பாறையை சேர்ந்த ஏ.எம். நிமஷ துலானி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டதுடன் மேலும் பல கிளைப்பொறுப்பாளர்களும் இதன்போது தெரிவுசெய்யப்பட்டனர்.

பல்லினங்களும் வாழும் அம்பாறை மாவட்டத்தில் இளைஞர்களுக்கிடையில் ஒற்றுமையை வலுப்படுத்தி தேசத்தை முன்னேற்ற எடுத்திருக்கும் இப்பணியில் இவ்வாண்டு தலைவராகவும், பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்கள் பிராந்திய ஊடக நிறுவனங்களின் முக்கிய பதவி வகிப்பவர்கள் என்பதுடன் அல்- மீஸான் பௌண்டஸனின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களாகவும், பல்வேறு சமூக அமைப்புக்களில் முக்கிய பதவிவகித்து வருகின்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கமக்கார அமைப்புக்கள் ஊடாக உழவியந்திரங்களுக்கு டீசல்



**த.சுபேசன்**

நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 12ஃ08 வெள்ளிக்கிழமை தென்மராட்சிப் பிரதேச உழவியந்திரங்களுக்கு கமக்கார அமைப்புக்கள் ஊடாக டீசல் வழங்கி வைக்கப்படும் என எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் வை.சிவராசா தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 4மணி வரை பெரும்போக நெற்பயிர்ச் செய்கையை முன்னிட்டு தென்மராட்சிப் பிரதேச விவசாயிகளின் உழவியந்திரங்களுக்கு டீசல் விநியோகிக்க இருப்பதால் குறித்த விவசாயிகள் தமது கமக்கார அமைப்பின் ஊடாக விபரங்களை சமர்ப்பித்து கியூ.ஆர் முறைமை அடிப்படையில் உழவியந்திரங்களுக்கான டீசலைப் பெற்றுக்கொள்ள முடியும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான உளநல செயலமர்வு



**ஹஸ்பர்**

தொழில்வாண்மை உளவியல் உளவளத்துணை நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட உளநலம் தொடர்பான நிகழ்வொன்று நேற்று (10) தம்பலகாமம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ளது. பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதளுக்கிணங்க இடம் பெற்ற குறித்த நிகழ்வில் உளநலம் தொடர்பிலும் உளச் சுகாதாரம் மற்றும் உளவியல் ரீதியான பிரச்சினைகளில் இருந்து மீள்வதற்கான வழி காட்டல்கள் என பல விடயங்கள் இதன் போது தெளிவுபடுத்தப்பட்டன. இதில் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்ர்களும், எஹட் கரித்தாஸ் நிறுவன உத்தியோகத்தர் பிரகலாதன் , வளவாளராக நன்நடத்தை உத்தியோகத்தர் ரவிச்சந்திரன் அவர்களும் கலந்து கொண்டனர்.

# றன்னர் அப் ஆக தம்பலகாமம் பிரதேச அணி



**ஹஸ்பர்**

கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களம் ஊடாக நடாத்தப்பட்டு வரும் மாகாண விளையாட்டு போட்டில் கரப்பந்தாட்ட போட்டியில் தம்பலகாமம் பிரதேச அணியினர் **Runner up** ஆக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அண்மையில் நடைபெற்ற குறித்த போட்டியில் தெரிவாகினர்.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதளுக்கிணங்க விளையாட்டு உத்தியோகத்தர் கே.டி.ஹாரீஸ் திறம்பட வழி நடாத்தி வந்ததுடன் பயிற்சியினையும் அளித்தார். இரு வருடங்களின் பின் வரலாற்றில் இவ் வெற்றியினை முடி சூடியுள்ளதாககவும் தெரிவிக்கப்படுகிறது.

இம் மாகாண விளையாட்டு போட்டிகள் யாவும் மாகாண விளையாட்டு பணிப்பாளர் என்.எம். நௌபீஸ் அவர்களின் மேற்பார்வையின் கீழ் இடம் பெற்று வருகிறது. இதில் திருகோணமலை , மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களை சேர்ந்த அணியினர் பலப் பரீட்சை நடாத்தினர்.

# ஆராய்ச்சிகளின் முடிவுகள் பல்கலைக்கழகத்தின் தரத்தினை நிர்ணயம் செய்யும்







**(நூருள் /ஹுதா உமர்)**

ஆய்வு அறிக்கையின் நோக்கம் தனிப்பட்ட மதிப்புகளுடன் தொடர்புடைய ஆய்வின் முக்கியத்துவத்தை மதிப்பிடுவதற்கு பாடத்துக்கு உதவியாகவும், அறிக்கையானது ஆய்வின் உடனடி நோக்கத்தை மட்டுமல்ல, எந்த பெரிய இறுதி நோக்கத்தையும் உள்ளடக்கியிருக்க வேண்டும். ஆராய்ச்சிகளின் முடிவுகள் பிரசுரிக்கப்படும் போது ஆராய்ச்சியாளர்களின் தரமும், பல்கலைக்கழகத்தின் தரமும் உயரும் என தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று (10) புதன்கிழமை நடைபெற்றது. வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் தலைவர் எஸ்.சபீனா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் உரையாற்றுகையில்,

தேவையான மற்றும் நியாயமான ஆராய்ச்சி மூலோபாயமாக, ஏமாற்றுதல் அல்லது தகவல்களைத்தடுத்து நிறுத்துதல் போன்ற ஆய்வில் ஈடுபட்டிருந்தால், ஆய்வறிக்கையின் நோக்கம் குறைந்தபட்சம் சாத்தியமான ஏமாற்று அல்லது தகவலைதடுத்து நிறுத்தும் வகையில் எழுதப்பட வேண்டும் என தெளிவுபடுத்தினார். ஆய்வின் நோக்கம் ஆராய்ச்சியின் அறிவியல் நோக்கம் பற்றிய தெளிவான மற்றும் துல்லியமான அறிக்கையாக இருக்க வேண்டும்.

நீங்கள் கல்வி ஆராய்ச்சி செய்யும் போது, உங்கள் நோக்கத்தை வரையறுப்பது முக்கியம். ஒரு நோக்க அறிக்கை வரும்போது, இது உங்கள் தரமான அல்லது அளவு ஆராய்ச்சியின் நோக்கத்தை தெளிவாக வரவேற்கிறது தனிப்பட்ட மற்றும் உலக எடுத்துக்காட்டுகள் மூலம் ஆராய்ச்சி நோக்க அறிக்கையில் விவரங்களை பெற வேண்டும்.

பொதுவாக ஆராய்ச்சி புதிய தேடல்களை உருவாக்கப்பட ஏற்கனவே இருக்கிற ஆராய்ச்சிகளுக்கு மேலதிகமாக அறிவு சார்ந்த தகவல்களைக் கொண்டு சேர்த்தல் ஏற்கனவே செய்யப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளை மீள் கேள்விக்கு உட்படுத்தல் வேண்டும். ஏற்கனவே செய்யப்பட்ட ஆராய்ச்சிகளில் உள்ள வெற்றிடங்களை சரிபார்த்துக் கொள்ள வேண்டும். ஆராய்ச்சிகளின் நோக்கம் ஆராய்ச்சி செய்வதற்குரிய ஆர்வம் இருக்க வேண்டும் மற்றும் கடின உழைப்பும், ஆர்வமாக ஈடுபடுகிறோமோ உற்சாகமாக அதற்குரிய ஆராய்ச்சி முடிவுகள் ஒரு உண்மையானதும் உறுதியானதுமாக வரும்.

நான் அடிக்கடி குறிப்பிடுவது போல் ஆராய்ச்சி என்பது கற்பித்தலில் பிரிக்க முடியாத ஒரு அங்கமாகும், கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளோடு ஆராய்ச்சியும் ஒரு கல்வியாளர்களின் முக்கிய வகிபாகமாகும். அதாவது கற்பித்தல் துறையில் நிலைத்து நிற்பதற்கு ஆராய்ச்சியில் தொடர்ச்சியாக ஈடுபடவேண்டும் மற்றும் கோட்பாடு சம்பந்தமான கல்வியுடன் சேர்த்து ஆராய்ச்சி செய்வதும் அவசியமாகும். ஆராய்ச்சியில் முழு ஈடுபாட்டுடன் தொடர்ச்சியாக செய்ய வேண்டும் ஆராய்ச்சி செய்வதற்கு குறிப்பிட்ட பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் நோக்கத்தோடு ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும்.

ஆராய்ச்சியில் ஈடுபடுவது ஏதாவது ஒரு பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கத்தோடு இருக்க வேண்டும். தொடர்ச்சியான இலக்கண ஆய்வுகளின் மூலம் ஆராய்ச்சிக்குரிய பிரச்சினையை இலகுவாக பெற்றுக்கொள்ளலாம். இலக்கணம் ஆராய்வு செய்வதற்கான ஒரு ஆராய்ச்சியாளர் அதிகமாக வாசிப்பில் ஈடுபட வேண்டுமென்றும், அத்துடன் இலக்கணம் ஆய்வு செய்வதன் மூலம் ஏற்கனவே செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் முடிவுகளை அறிவதோடு அதில் விடப்பட்ட கண்டறியப்படாத விடயங்களை அறிய வேண்டும். ஆராய்ச்சியாளர்கள் எப்போதும் ஒரு குறியவட்டத்துக்குள் ஆராய்ச்சி செய்வதைவிடுத்து, வெவ்வேறான துறைகளிலுள்ள ஒருங்கிணைந்து ஆராய்ச்சிகளில் ஈடுபட வேண்டும்.

சமூக விஞ்ஞான துறை மற்றும் மனிதப் பண்பியல் துறையின் முக்கியத்துவத்தை சிலாகித்துப் பேசியத்துடன் அத்துறை தொடர்பான ஆய்வுகள் மேலும் விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தினையும் எடுத்துறைத்தார். எனது துறை சமூக விஞ்ஞானமாக இருந்தபோதிலும் கோவிட்-19 காலப்பகுதியில் இது சம்மந்தமாக ஆராய்ச்சியில் ஈடுபட்டு, கோவிட்-19 தாக்கம் எவ்வாறு சமூகம், பொருளாதாரம், கல்வி,அரசியல் ரீதியிலான தாக்கத்தினை உண்டு பண்ணியது என்பதனை கண்டறிய முடிந்தது என்றும் தெரிவித்தார்.

சமூக அறிவியல் மற்றும் மனிதப் பண்பியல்துறை ஏனைய துறைகளை ஊடறுத்து செல்லும் விதம் குறித்தும், சமூக அறிவியல் ஆய்வுப் பரப்பினை விஸ்தரிப்பதனுடாக சமகால நெருக்கடிகளை கையாளும் வழிவகைகள் குறித்தும் அவரது உரை கவனம் செலுத்தியது. ஆராய்ச்சிகளின் முடிவுகள் பிரசுரிக்கப்படும் போது ஆராய்ச்சியாளர்களின் தரமும், பல்கலைக்கழகத்தின் தரமும் உயர்ரும். என்று தெரிவித்தார். சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்கள், இளம் ஆராய்ச்சியாளர்களை இணைத்து ஆராய்ச்சியில் ஈடுபடுவதன் மூலம் இளம் ஆராய்ச்சியாளர்களுக்கு சிறந்த வழிகாட்டல் வழங்க வேண்டும்.

ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்கள் தங்களுக்கு அண்மையில் உள்ள தொழில் மையங்கள், நிறுவனங்கள், துறை சார்ந்த அமைப்புகள் ஒருங்கிணைந்து ஆராய்ச்சியில் ஈடுபடுதல் வேண்டும். இது போன்ற நிகழ்வுகள் ஆராய்ச்சியாளர்களுக்கு நல்லதொரு சந்தர்ப்பமாகும், ஆகையால் ஆராய்ச்சியாளர்கள் சிறந்த முறையில் தங்களது ஆராய்ச்சி முடிவுகளை வெளிப்படுத்துவதற்கு இது ஒரு சிறந்த களமாகும். இந்நிகழ்வின் சிறப்பு பேச்சாளராக இந்தியாவின் கல்கத்தா வெஸ்ட் வெண்கல் ஸ்டேட் பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ துறைத்தலைவர் பேராசிரியர் கலாநிதி பிராணம் டார் தொழில்நுட்பத்தினுடாக சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வின் இறுதியில் "ஆய்வு சஞ்சிகை நூலின் முதல் பிரதி உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கருக்கு வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி கலாநிதி எஸ்.சபீனா ஹசனால் வழங்கி வைக்கப்பட்டது. நூலின் பிரதிகள் பதிவாளர், பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோர்களுக்கு உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரினால் வழங்கி வைக்கப்பட்டது.

# பிரச்சினையை தீர்க்குமாறு ஜனாதிபதியிடம் மக்கள் காங்கிரஸ் எழுத்துமூல ஆவணம் கையளிப்பு



'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற செயலணியின் அறிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதியிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் விடுத்த வேண்டுகோளுக்கு, ஜனாதிபதி உடன்பட்டுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார் .

ஜனாதிபதி செயலகத்தில், நேற்று மாலை (10) அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைமை உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் ஜனாதிபதியை சந்தித்துக் கலந்துரையாடினர். இந்த சந்திப்பில் பிரதமரும் பங்கேற்றிருந்தார். ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே, மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் மேற்கண்டவாறு கூறினார். தொடர்ந்து பேசிய அவர்,

"முன்னாள் ஜனாதிபதியினால் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற செயலணி ஒன்று உருவாக்கப்பட்டது. எந்த வகையிலும் தகுதியற்ற ஒருவரை தலைவராகக் கொண்டு, அவருக்கு விருப்பமான முறையில் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு, முன்னாள் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த ஆவணத்தை எந்த வகையிலும் நடைமுறைப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்த போது, அவர் அதற்கு உடன்பட்டார்.

அது மாத்திரமின்றி, இந்த நாட்டில் பொருளாதாரம் சீரழிந்தமைக்கு இனவாத, மதவாத சக்திகளின் கைகள் ஓங்கியமையே பிரதான காரணம். இந்த அரசாங்கத்துக்கு முன்னர் ஆட்சியிலிருந்த ஜனாதிபதியின் தலைமையிலான அரசு, இனவாதத்தையும் மதவாதத்தையும் மூலதனமாகக் கொண்டே ஆட்சியை அமைத்தது. இனவாதத்தை பரப்புவதன் மூலமே தமது அரசியல் இருப்பை நிலைப்படுத்தலாம் எனவும் எண்ணி, தொடர்ச்சியாக இனவாத சக்திகளை வளரவிட்டனர். அதனால்தான், இந்த நாடு குட்டிச்சுவராகி, 'கியூ' யுகத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறது. எனவே, இந்த நாட்டை கட்டியெழுப்புவதாக இருந்தால், இனவாத, மதவாத சக்திகளின் கைகள் ஓங்கவிடாமல் தடுக்க வேண்டும். பாதுகாக்க வேண்டும் என்பதை நாம் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினோம்.

எதிர்காலத்தில், சர்வகட்சிகளையும் இணைத்து அரசு முன்னெடுத்துச் செல்லவுள்ள வேலைத்திட்டத்திற்கு, எமது கட்சியின் ஒத்துழைப்பையும் ஜனாதிபதி வேண்டிய போது, ஏனைய கட்சிகளோடு சேர்ந்து, ஒரு பொதுவான வேலைத்திட்டத்திற்காக நாட்டு நலனை முன்னிறுத்தி, பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் என நாம் உறுதியளித்தோம்.

தற்போது பாராளுமன்றத்தில் 22ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், எந்த ஒரு அரசியல் சீர்திருத்தத்திலும் கட்சிகளின் நலனுக்கப்பால், நாட்டு நலனை முன்னிறுத்தி அதனைக் கொண்டுவர வேண்டும் என நாம் தெரிவித்தோம். நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை தீர்த்து வைக்க வேண்டியதன் அவசியத்தையும் நாம் இதன்போது வலியுறுத்தினோம். குறிப்பாக, மன்னார் – புத்தளம் பாதையை திறத்தல், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம் ஆகியவற்றினால் கையகப்படுத்தப்பட்டுள்ள மக்களின் பூர்வீகக் காணிகளை விடுவித்து, அவற்றை மக்களின் பயன்பாட்டுக்கு உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரினோம்.

அத்துடன், தாமதமடைந்துள்ள இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் இங்கு வலியுறுத்தினோம். விவசாயிகளுக்கும், கடற்றொழிலாளர்களுக்கும் தமது தொழிலை சிரமமின்றி மேற்கொள்வதற்காக, அவர்களுக்கு தேவையான எண்ணெய் வசதிகளை வழங்குமாறு வேண்டிக்கொண்டோம். மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் தட்டுபாடு மற்றும் கட்டுப்பாட்டு விலையின்றி மக்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் தொடர்பில் எடுத்துக்கூறியதுடன், பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் தங்குதடையின்றிக் கிடைக்க ஆவன செய்யுமாறும் கோரினோம். மேலும், அவசராகாலச் சட்டத்தை தொடர்ந்தும் நீடிக்க வேண்டாமென வலியுறுத்தியதுடன், ஏற்கனவே, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தன் (ீவுயு) கீழ் அநியாயமாகக் கைது செய்யப்பட்டு இன்னும் சிறையில் இருப்பவர்களை அவசரமாக விடுதலை செய்யுமாறும், சிறிய சிறிய காரணங்களுக்காக போராட்டக்காரர்களை அநியாயமாகக் கைது செய்வதையும், பழிவாங்குவதையும் உடன் நிறுத்த வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தோம்.

இதேபோன்று, தற்போதைய நெருக்கடியான சூழலில் மக்கள் எதிர்நோக்கும் பல முக்கியமான பிரச்சினைகளை எடுத்துரைத்து, அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தோம். அத்துடன், மக்கள் நலன் குறித்த இன்னும் பல முக்கிய விடயங்கள் அடங்கிய, எழுத்து மூலமான ஆவணம் ஒன்றை ஜனாதிபதியிடம் கையளித்ததோடு, அவற்றை துரிதகதியில் நடைமுறைப்படுத்தித் தருமாறும் வேண்டுகோள் விடுத்தோம்" என்று கூறினார்.

# காட்டுமாஞ்சோலை வடபத்திரகாளி அம்பாளின் தீமிதிப்பு









மட்டக்களப்பு, ஏறாவூர், காட்டுமாஞ்சோலை ஸ்ரீ வடபத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு உற்சவம் கடந்த 31.07.2022 அன்று திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி வியாழக்கிழமை (11ம் திகதி) தீ மிதிப்பு வைபவத்துடன் உற்சவ விழா நிறைவடைந்தது. ஏறாவூர் காட்டுமாஞ்சோலையில் வீற்றிருந்து வேண்டுவோர்க்கு அருள் வழங்கும் ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாளின் தீமிதிப்பு உற்சவம் என்பது வெகுசிறப்பானதாக காணப்படுகின்றது. 11 நாள்கள் கொண்ட இந்த திருச்சடங்கு உற்சவத்திற்கு பல பிரதேசங்களிலுமிருந்தும் ஏராளமானோர் வருகைதந்து கலந்து உற்சவத்தினை சிறப்பித்திருந்தனர். இன்றைய தீமிதிப்பு உற்சவத்தில் மாவட்டத்தின் பல பிரதேசங்களிலுமிருந்தும் வருகை தந்த மக்கள் மிகவும் பக்தி உணர்வுடன் தீமித்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவு செய்தனர். **(வவுணதீவு நிருபர்)**